

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் சாலவாக்கத்தில் செயல்படும் மன்சூரியா தற்காப்பு கலைக் கூடத்தைச் சேர்ந்த 22 தற்காப்பு வீரர்கள் சென்னை விஜடி கல்லூரியில் நடைபெற்ற தேசிய தற்காப்பு கலை மற்றும் சிலம்பம் போட்டிகளில் பங்கேற்று 11 வீரர்கள் தங்கப் பதக்கம் வென்றனர். இந்த வீரர்களுக்கு ஊராட்சி சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.எ. சால்வை அணிவித்து, மேலும் சில மாதங்களில் தென் ஆப்பிரிக்காவில் நடைபெறும் சர்வதேச போட்டியில் கலந்து கொள்வதற்கு வாழ்த்து தெரிவித்தார். உடன் வெங்கடேசன், ஊராட்சி மன்ற தலைவர் சத்யா சக்திவேல் ஆகியோர் உள்ளனர்

## மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க.

# நாடு போற்றும் நான்காண்டு - தொடரட்டும் பல்லாண்டு ஆட்சியின் சாதனை விளக்க பொதுக்கூட்டங்கள்!



## மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் அறிவிப்பு!

மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க.விற்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பகுதி கழகங்களில் கழகத் தலைவர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் கீழ்க்கண்டவாறு நடைபெறும்.

| சட்டமன்ற தொகுதி | ஒன்றிய நகர பகுதி கழகங்கள் | பொதுக்கூட்டம் நடைபெறும் இடம் | சிறப்புபேச்சாளர்கள் |
|---|---|---|---|
| 08.05.2025 வியாழக்கிழமை | | | |
| திருமங்கலம் | தே.கல்லுப்பட்டி கிழக்கு ஒன்றியம் | புளியம்பட்டி | எஸ்.எஸ்.பழனி மாணிக்கம் |
| திருமங்கலம் | திருமங்கலம் மேற்கு ஒன்றியம் | கே.புளியங்குளம் | போடி. எஸ்.எஸ்.கலைச்செல்வன் |
| திருப்பரங்குன்றம் | திருப்பரங்குன்றம் மேற்கு ஒன்றியம் | தனக்கம்குளம் | கம்பம் பெ.செல்வேந்திரன் |
| திருப்பரங்குன்றம் | திருப்பரங்குன்றம் வடக்கு பகுதி | பேருந்து நிலையம், திருப்பரங்குன்றம் | சங்கீதா இரா.கண்ணன் |
| உசிலம்பட்டி | உசிலம்பட்டி வடக்கு ஒன்றியம் | உத்தப்பநாயக்கனூர் | போடி பா.காமராஜ் |
| உசிலம்பட்டி | சேடபட்டி மேற்கு ஒன்றியம் | பேரையம்பட்டி | கு.மாரிமுத்து |
| 09.05.2025 வெள்ளிக்கிழமை | | | |
| திருமங்கலம் | திருமங்கலம் கிழக்கு ஒன்றியம் | கப்பலூர் | எழும்பூர் மோ.கோபி |
| திருப்பரங்குன்றம் | திருப்பரங்குன்றம் தெற்கு பகுதி | திருநகர் 2 ஸ்டாப் | கம்பம் பெ.செல்வேந்திரன் |
| உசிலம்பட்டி | உசிலம்பட்டி மேற்குஒன்றியம் | தொட்டப்ப நாயக்கனூர் | கு.மாரிமுத்து |
| 10.05.2025 சனிக்கிழமை | | | |
| திருமங்கலம் | தே.கல்லுப்பட்டி வடக்கு ஒன்றியம் | வன்னிவேலம்பட்டி | போடி. எஸ்.எஸ்.கலைச்செல்வன் |
| திருமங்கலம் | திருமங்கலம் நகரம் | ஜவஹர்நகர்ரவுண் டான | எஸ்.எஸ்.பழனிமாணிக்க ம் |
| திருப்பரங்குன்றம் | திருப்பரங்குன்றம் கிழக்கு ஒன்றியம் | சிலைமான் | போடிபா.காமராஜ், ச.சௌமியா |
| உசிலம்பட்டி | செல்லம்பட்டி தெற்கு ஒன்றியம் | கருமாத்தூர் | கு.மாரிமுத்து, அசாருதீன் |
| 11.05.2025 ஞாயிற்றுகிழமை | | | |
| திருமங்கலம் | தே.கல்லுப்பட்டி தெற்கு ஒன்றியம் | மோதகம் எம்.சுப்புலபுரம் | எஸ்.எஸ்.பழனிமாணிக்க ம் |
| திருமங்கலம் | கள்ளிக்குடி வடக்கு ஒன்றியம் | வீரப்பெருமாள்புறம் | போடி. எஸ்.எஸ்.கலைச்செல்வன் |
| திருமங்கலம் | திருமங்கலம் தெற்கு ஒன்றியம் | பூசலப்புரம் | எழும்பூர்மோ.கோபி |
| உசிலம்பட்டி | உசிலம்பட்டி நகரம் | கவண்டன்பட்டி வார்டு 2324 | சேப்பாக்கம் வே.பா.பிரபாகரன் |
| உசிலம்பட்டி | உசிலம்பட்டி தெற்கு ஒன்றியம் | எருமார்பட்டி | முகவைக.இராமர் |
| உசிலம்பட்டி | செல்லம்பட்டி வடக்கு ஒன்றியம் | குறவகுடி | போடிபா.காமராஜ் |
| உசிலம்பட்டி | சேடபட்டி தெற்கு ஒன்றியம் | அத்திப்பட்டி | சங்கீதா இரா.கண்ணன், பேனாதெய்வம் |
| 12.05.2025 திங்கள்கிழமை | | | |
| திருமங்கலம் | கள்ளிக்குடி தெற்கு ஒன்றியம் | எஸ்.பி.நத்தம் | எழும்பூர்மோ.கோபி |
| திருப்பரங்குன்றம் | அவனியாபுரம் கிழக்கு பகுதி | சிந்தாமணி | கு.வெங்கட்ராமன் |
| திருப்பரங்குன்றம் | அவனியாபுரம் மேற்கு பகுதி | மீனாட்சி நகர் | எஸ்.எஸ்.பழனி மாணிக்கம் |
| திருப்பரங்குன்றம் | திருப்பரங்குன்றம் தெற்கு ஒன்றியம் | கைத்தறி நகர், நிலையூர் | போடி. எஸ்.எஸ்.கலைச்செல்வன் |
| உசிலம்பட்டி | சேடபட்டி வடக்கு ஒன்றியம் | பள்ளப்பட்டி தாடையம்பட்டி | சேப்பாக்கம் வே.பா.பிரபாகரன் |

அதுசமயம் ஒன்றிய, நகர, பகுதி கழக செயலாளர்கள் பொதுக்கூட்டத்திற்கான ஏற்பாடுகளை செய்யும்படியும், தங்கள் பகுதியில் நடைபெறும் கழக அரசின் நான்காண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், சார்பு அணிகளின் மாநிலமாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதிபேரூர் கழகத்திற்கு உட்பட்ட கழக நிர்வாகிகள் -மாவட்ட பிரதிநிதிகள், வட்ட வார்டு கிளைக் கழக செயலாளர்கள் நிர்வாகிகள் பிரதிநிதிகள், கழக சார்பு அணியின் மாவட்ட ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், நிர்வாகிகள், பூத்முகவர்கள், பூத்கமிட்டி உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின்இந்நாள்முன்னாள்பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் மற்றும் கழக உடன் பிறப்புகள் என அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**சேடபட்டி மு.மணிமாறன்,**
செயலாளர்,
மதுரை தெற்கு மாவட்ட திமுக.

## வனத்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் தலைமையில்

# மாநில அளவிலான வனத்துறை உயர் அலுவலர்களுடனான முதலாவது கலந்தாய்வுக்கூட்டம்!

## தலைமை வனப்பாதுகாவலர் அலுவலகத்தில் நடைபெற்றது!

சென்னை, மே 8-

காதி மற்றும் வனத்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் அவர்கள் தலைமையில் மாநில அளவிலான வனத்துறை உயர் அலுவலர்களுடனான முதலாவது கலந்தாய்வுக்கூட்டம் சென்னை வேளச்சேரி (கிண்டி) முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமை செயலாளர் திருமதி.சுப்ரியா சாஹு முன்னிலை வகித்தார்.

இக்கூட்டத்தில் வனத்துறை அமைச்சர் அவர்கள் மாவட்ட வன அலுவலர்களுடன் மாவட்ட வாரியாக வனத்துறையில் நடைபெற்று வரும் பணிகள் குறித்தும் அதன் முன்னேற்றம் குறித்தும் விரிவாக ஆய்வு செய்தார். பலவகையான பலன் தரக்கூடிய மரங்கள் வனத்துறையின் மூலம் மக்களுக்கு பயன் பட்டு வரும் பட்சத்தில் அந்நிய களைச் செடிகளை முன்னுரிமை அடிப்படையில் அப்புறப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் சீமைக்கருவேல மரங்களை முற்றிலுமாகவும் துரிதமாகவும் அப்புறப்படுத்தவும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும், காட்டுப்பன்றிகள் விளைநிலங்களை சேதம் விளைவிக்காமல் இருப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார். மேலும் வனப் பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு அடிப்படை தேவைகளான சாலை மற்றும் இதர வசதிகளை சட்டத்திற்கு உட்பட்டு அனுமதி வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ள பட்டு வருவது குறித்தும் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. தற்போது யானைகள் காப்பகம் செயல்பாடுகள் குறித்தும் அதன் பராமரிப்பு குறித்தும் வனத்துறை அமைச்சர் அவர்கள் கேட்டறிந்தார். மேலும், மனித வள - யானை மோதல்களை தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் கேட்டறிந்தார்.

இக்கூட்டத்தில் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமை செயலாளர் திருமதி.சுப்ரியா சாஹு, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் வன உயிரின காப்பாளார் ராகேஷ்குமார் டோக்ரா, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் இயக்குநர் (AIWC), உதயன், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை திட்ட இயக்குநர் ஐ.அன்வருதீன், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (நிர்வாகம்) தெபாஷீஷ் ஜானா, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (ஆராய்ச்சி) திருமதி, மீட்டா பானர்ஜி, கூடுதல் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வன உயிரினம்) முனைவர் நாகநாதன், இணை இயக்குநர் திருமதி. த.தமிழ்மொழி அமுது மற்றும் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அனைத்து மாவட்ட வன அலுவலர்கள், வனத்துறை உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## வழக்கறிஞர் இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. தலைமை!வழக்கறிஞர் பெர்னாண்டஸ் ரத்தின ராஜா முன்னிலை!

# புரசைவாக்கம் - வழக்கறிஞர் விஜய்போஸ் இல்ல விழா!

## ஆர்.எஸ். பாரதி – டி.கே.எஸ். இளங்கோவன் – வழக்கறிஞர் ஆர். கிரிராஜன் எம்.பி. வாழ்த்து!

சென்னை, மே 8-

சென்னை கிழக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி முன்னாள் துணை அமைப்பாளர் வழக்கறிஞர் திராவிடன் விஜய்போஸின் புதல்வி வி. அனிதா மீகாள் - ஜோ. டேவிட் சாலமன் ஆகியோரின் திருமண நிச்சயதார்த்த விழா சென்னை கீழ்ப்பாக்கம் சி.எஸ்.ஐ. லைட் ஹால் மண்டபத்தில் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினரும் கழக சட்டத்துறை இணை செயலாளருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் தலைமையில் நடைபெற்றது.

தமிழ்நாடு அரசு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டு கழகத்தின் தலைவரும் சி.எஸ்.ஐ. மாமன்றத்தின் முன்னாள் பொதுச் செயலாளருமான வழக்கறிஞர் பெர்னாண்டஸ் ரத்தின ராஜா முன்னிலை வகித்தார்.

எழும்பூர் தெற்கு பகுதி முன்னாள் செயலாளர் ஜெ. விஜயகுமார், முன்னாள் வட்ட செயலாளர் சூளை ஆர். புருசோத்தமன், ஜெ. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் வரவேற்புரையாற்றினர்.

இவ்விழாவில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, தலைமை கழக செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், வழக்கறிஞர் ஆர். கிரிராஜன் எம்.பி. பெ.வீ.கல்யாணசுந்தரம் ஆகியோர் பங்கேற்று மணமக்களை வாழ்த்தினர்.

விழாவில் சூளை ஜி.கருணாகரன், சு. கோட்டிஸ்வரன், சென்னை கிழக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர், எழும்பூர் நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கத் தலைவர் வழக்கறிஞர் டி. துரைக்கண்ணன், மூத்த வழக்கறிஞர் கே.சரவணன் , டான் போஸ்கோ, குணசேகரன், டாக்டர் டி. தேவராஜ், டாக்டர் யூ.வின்னரசன், டாக்டர் யூ.வில் மார்ட்டின் கிளார்க் மற்றும் எழும்பூர் தொகுதியைச் சேர்ந்த முன்னாள் நிர்வாகிகள் ந.கலையரசன் மு. கமலக்கண்ணன் , கி.புஷ்பராஜ், விஜய தேவராஜ், எம்.எழிலரசி, கழக எழும்பூர் வழக்கறிஞர்கள் ஏ. சேதுராமன் ஜி.பிரபு , இ.குமரேசன், யோகேஷ்வரன், மணி, சங்கர் மற்றும் கழகத்தைச் சேர்ந்த நிக்சன் ஜெபராஜ், நெகேமியா நாராயணன், பிராங்க்ளின், ரா.தேவதாஸ், சந்திரகாந்த், பொறியாளர் வி.மனோகர், எஸ். விநாயகமூர்த்தி, ரா. தவமணி, பாடகர் துரைராஜ், இ.குமரன், சண்முக சுந்தரம், மோகன், லீலா ராம், ரா.முருகன்,தேவசகாயம், எஸ்.பார்த்திபன், ஸ்டீபன், ஜான் இம்மானுவேல், எம்.பார்த்திபன், ஆரோக்கியராஜ் , ஜோசப் மற்றும் கழக முன்னோடிகள், நண்பர்கள், உறவினர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

இவ்விழாவில் பங்கேற்ற அனைவருக்கும் சென்னை கிழக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி முன்னாள் துணை அமைப்பாளர் வழக்கறிஞர் திராவிடன் விஜய்போஸ் நன்றி கூறினார்.



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட திருத்தணி பொதட்டூர்பேட்டை பள்ளிப்பட்டு, ஆர்.கே.பேட்டை உள்ளிட்ட பல்வேறு இடங்களிலிருந்து பொதுமக்களிடம் பெறப்பட்ட மனுக்களை திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் மு. பிரதாப்யிடம் கோரிக்கை மனுக்களை வழங்கி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார் உடன் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

## புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# நாடுபோற்றும் நான்காண்டு - தொடரட்டும் பல்லாண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டங்கள்!



## மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் அறிவிப்பு!

| வ. எண் | தேதி | இடம் | ஒன்றியம் | பேச்சாளர்/ ஒன்றிய செயலாளர் |
|---|---|---|---|---|
| 1 | 08.05.2025 | குளத்தூர் | குன்றாண்டார் கோவில் மேற்கு | வரகூர் காமராஜ் O.S.வெங்கடாசலம் |
| 2 | | சூரக்காடு | கறம்பக்குடி தெற்கு | தஞ்சை காமராஜ் தவ.பாஞ்சாலன் |
| 3 | | இராஜாளிப்பட்டி | விராலிமலை மேற்கு | தீக்கனல் செல்வம் அ.இளங்குமரன் |
| 4 | 09.05.2025 | எரசநாயக்கம்பட்டி | விராலிமலை மத்தியம் | தானூர் சிவக்கொழுந்து K.P.அய்யப்பன் |
| 5 | 10.05.2025 | புதுநகர் | கந்தர்வகோட்டை வடக்கு | முகமது இலியாஸ் மா.தமிழ்அய்யா |
| 6 | | அண்டக்குளம் | குன்றாண்டார்கோவில் மத்தியம் | நாஞ்சில் சம்பத், குளவாய்பட்டி C.சண்முகம் |
| 7 | | மருதன்கோன்விடுதி 4 ரோடு | கறம்பக்குடி வடக்கு | வரகூர் காமராஜ் வெ.முத்துகிருஷ்ணன் |
| 8 | | எருதுப்பட்டி | அன்னவாசல் வடக்கு | தஞ்சை காமராஜ் RRS.மாரிமுத்து |
| 9 | 11.05.2025 | கந்தர்வகோட்டை | கந்தர்வகோட்டை தெற்கு | வரகூர் காமராஜ் M.பரமசிவம் |
| 10 | | செம்பாட்டூர் | புதுக்கோட்டை வடக்கு | நாஞ்சில் சம்பத் R.சாமிநாதன் |
| 11 | | அன்னவாசல் | அன்னவாசல் தெற்கு | தானூர் சிவக்கொழுந்து K.S.சந்திரன் |
| 12 | 12.05.2025 | செங்களூர் | குன்றாண்டார்கோவில் கிழக்கு | A.சிவா (எ) சிவக்குமார் N.சேட்டு |
| 13 | | பண்ணைகேட் -வாகவாசல் (ஊ) | புதுக்கோட்டை தெற்கு | வரக்கூர் காமராஜ் மு.க.ராமகிருஷ்ணன் |
| 14 | | மண்டையூர் | விராலிமலை கிழக்கு | தஞ்சை காமராஜ் மு.பி.ம.சத்தியசீலன் |

**கே.கே.செல்லபாண்டியன்**
செயலாளர், புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க.